முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்

ம.சா.1– தனராசு E.A.No. 02/2024 in E.P.No.10/2024 நாள் :03.11.2025

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வழக்கறிஞர் குமாஸ்தாவாக பணிபுரிகிறேன் என்றால் சரிதான். என் மகன் மனோகரன், அவரது மனைவி ஆகியோர் உயிருடன் இருக்கிறார்களா என்றால் எனக்கும் அவர்களுக்கும் சம்மந்தம் இல்லை. எனது மகன் 05.10.2017ல் 2ம் எதிர்மனுதாரர் என் மகன் மனோகரன் கடன் வாங்கியதாக சொல்லுவது பற்றியும் அதற்காக காசோலை எழுதி கொடுத்தாக சொல்லுவதும் எனக்கு தெரியாது. நான் 11.04.2019ல் என் உறவினர் ராஜேந்திரசோழன் என்பவருக்கு நான் கிரையம் கொடுத்திருக்கிறேனா என்றால் ஆமாம், ஒரு பூர்வீக சொத்தை கிரையம் கொடுத்திருக்கிறேன். அந்த கிரைய பத்திரத்தில் மனோகரன் கையெழுத்து போட்டிருக்கிறாரா என்றால் ஆமாம் போட்டு இருக்கிறார், அவருக்கு பாகம் இருப்பதாக சொல்லி கையெழுத்து வாங்கி கொண்டார்கள். நான் ராஜேந்திரசோழனுக்கு கிரையம் கொடுத்ததற்கு பேங்க் மூலமாக பணம் வாங்கி கொள்ளவில்லை. 2 வருடத்திற்கு பிறகு ராஜேந்திரசோழனிடமிருந்து அதே சொத்தை 08.03.2021ல் நான் மீண்டும் கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். சில அயிட்ட சொத்துகளை தான் வாங்கினேன். நான் ஏன் திரும்ப வாங்கினேன் என்பதற்கு காணரம் என்ன என்றால் என் மகன் எல்லா சொத்துக்களையும் அழித்து விட்டதால் என் பேரப்பிள்ளைகளுக்கு ஏதேனும் சொத்து வேண்டும் என்பதற்கு வாங்கினேன். அந்த சொத்து வாங்கியபோது பேரன் வயது என்ன என்றால் 09 அல்லது 10 வயது. நான் திரும்ப வாங்கிய சொத்தில் என் மகன் மற்றும் மருமகள் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். என் மகன் வாங்கிய கடன் நிலுவையில் இருக்கும்போதே நான் இந்த சொத்தை விற்க முடியாது என்றால் சரியல்ல. நான் கிரிமினல் நீதிமன்றத்தில் என் மகன் வாங்கிய கடன் பற்றி சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் இல்லை. என் மகன் வாங்கிய கடனை ஏமாற்றுவதற்காக தான் நான் கிரையம் கொடுத்துவிட்டு பின்பு கிரைய கொடுத்த அதே சொத்தை திரும்ப வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொத்தை கிரையம் வாங்கியதற்கு எனக்கு பணம் ஏது என்று கேட்டால் நான் சம்பாதித்து வைத்திருந்த

பணத்தை வைத்து தான் வாங்கினேன். அவ்வாறு நான் பணம் சேர்த்து வைத்திருந்ததிற்கு ஏதேனும் ஆதரவுகள் இருக்கிறதா என்றால் இல்லை. நான் வக்கீல் குமாஸ்த்தாவாக இருப்பதால் சட்ட நடவடிக்கைகளில் இருந்து அந்த சொத்தை பாதுகாப்பதற்காகவும், கடனை ஏமாற்றுவதற்காகவும் மைனர் பேரில் மீண்டும் அந்த சொத்தையே வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் மற்றும் மருமகள் உயிருடன் இருக்கும்போதே நான் கிரையம் பெற்றுள்ளதாக சொல்லுவது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கிரையம் கொடுத்து பின்னிட்டு அதே சொத்தை கிரையம் வாங்கியிருப்பது நம்பகதன்மை இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த சொத்து ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் எனக்கு தெரியாது. ராஜேந்திரசோழன் சொத்தை அனுபவித்தற்கு அவர் பெயரில் பட்ட மாறியதாகவோ வாய்தா ரசீது உள்ளதையோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தையும் கடன் கொடுத்தவரையும் ஏமாற்றுவதற்காக பொய்யான காரணங்களை கோரி இந்த மனு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே நான் போட்ட மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.